[1989 அக்டோபர் 31

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இதற்கு திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம்தான் விடை சொல்ல வேண்டும். (சிரிப்பு).

திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம்: தலைவர் அவர்களே, லேயர்ஸுக்கு சேவல் தேவையில்லை. (சிரிப்பு).

* **மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, சேவல் தேவையா, தேவையில்லையா என்பதற்கு குமரி அனந்தன் அவர்களும், பாலசுப்பிரமணியம் அவர்களும் பதில் அளித்துவிட்டார்கள். சேவல் தேவையில்லை என்றுதான் அவர்களே வேறு சின்னத்திற்கு போய்விட்டார்கள். (சிரிப்பு) காங்கிரஸ் கட்சியினுடைய துணைத் தலைவர் அவர்கள் ஆந்திராவிலிருந்து சேலை, வேட்டிகள் வாங்கப்பட்டன என்று சொன்னார்கள். 50 இலட்சம் சேலை வேட்டிகளில் கடைசியாக இந்த 200 ரூபாயும், 200 ரூபாய்க்கு குறைவாக வருமானம் உள்ளவர்களுக்கான 3½ இலட்சம் வேட்டி, சேலைகள் குறைந்த காரணத்தால் இங்கே எங்கும் அது கிடைக்கவில்லை. ஏனென்றால் நாம் ஒரு தரமான வேட்டியும், தரமான சேலையும்தான் தயாரித்தோம். அதைவிட தரம் குறைவானவைகள்தான் இங்கே இருந்தது. எனவே முன்பு உள்ள தரத்தில் வேறு மாநிலத்தில் வாங்க வேண்டும் என்பதற்காக ஆந்திரா மாநிலத்திலிருந்து 3½ இலட்சம் வேட்டி சேலைகள்தான் தருவிக்கப்பட்டன என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. குமரி அனந்தன்: தலைவர் அவர்களே, தேக்கம் ஆரம்பக் கூட்டுறவுச் சங்கங்களில் இருக்கிறதா என்று கேட்டேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, இல்லை.

(எ) சென்னை மற்றும் சில பகுதிகளில் ஏற்பட்டுள்ள குடிநீர்த் தட்டுப்பாடு.

திரு. எஸ். டி. உகம்சந்த்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது தமிழகத்திலே பருவ மழை தவறியிருக்கின்ற சூழ்நிலையிலே சென்னை நகரில் மிகவும் குடிநீர்த் தட்டுப்பாடு ஏற்பட்டிருக்கிறது. அதேபோன்று என்னுடைய நகரமாக விளங்கக்கூடிய மதுராந்தகத்திலும் தற்போது குடிநீர்த் தட்டுப்

1989 அக்டோபர் 31] [திரு. எஸ். டி. உகம்சந்த்]

பாடு மிகவும் கடுமையாக இருந்து கொண்டு வருகிறது. அதற்கு அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது என்ற விவரத்தை அறிய விரும்புகிறேன். அதோடு ஸ்டாண்டர்டு மோட்டார்ஸ் பற்றி ஏற்கனவே நானும் ஒரு ஒத்திவைப்பு தீர்மானத்தை கொடுத்திருக்கிறேன். அதற்கும் தாங்கள் அனுமதி வழங்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். மற்றொன்று. 200 ரூபாய்க்கு கீழே உள்ளவர்களுக்கு இலவச வேட்டி, சேலை கொடுக்க வேண்டுமென்று சொல்கிறார்கள்.... (குறுக்கீடு).

(10.50)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவ்வளவுதான். ஒரு பிரச்சினை மட்டும்தான். ஏற்கெனவே அதுபற்றிச் சொல்லியாகி விட்டது.

4. அறிவிப்புகள்.

(அ) மாற்றுத் தலைவர்கள் பட்டியல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 9, உள்விதி (1)-ன் கீழ் கீழ்க்கண்ட உறுப்பினர்களைப் பேரவையின் இரண்டாவது கூட்டத் தொடரின் மாற்றுத் தலைவர்களாக (Panel of Chairman) நியமிக்கிறேன் :

1. திரு. சா. கணேசன்.
2. டாக்டர் க. காஞ்சனா.
3. திரு. வே. தங்கபாண்டியன்.
4. திரு. கே. அர்ஜுனன்.
5. திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம்.
6. திரு. கோ. பூவராகன்.

5. அறிக்கைகள் அளித்தல்.

(அ) பொது நிறுவனங்கள் குழு.

திரு. சா. சிவசுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1989-90 ஆம் ஆண்டிற்கான பொது நிறுவனங்கள் குழுவின் பதினைந்தாவது அறிக்கையைப் பேரவைக்கு அளிக்கிறேன்.